# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.137/2025

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சண்முகநாதன் | Father's Name | : | சுப்பையன் |
| Village | : | திருக்களார் | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 05th day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருக்களார் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.01.2024 அன்று முத்துப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது காலை 10.30 மணியளவில் நானும் ஆய்வாளர் திரு ராஜேஷ், காவலர் 912 திரு மணிவண்ணன் ஆகியோரும் மதுவிலக்கு சம்மந்தமாக விலாங்காடு சமத்துவபுரம் அருகில் கண்காணித்துக் கொண்டிருந்தபோது சமத்துவபுரம் பஸ் ஸ்டாப் அருகில் நின்று கொண்டிருந்த நபர் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை

SELVA MUTHU KUMARI    Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.05 14:30:31 +0530

விரட்டி பிடித்தோம். அவரை பிடித்து விசாரித்ததில் அவரது பெயர் சரத்குமார் என சொன்னார். அவர் நின்ற இடத்தை சோதனை செய்தபோது 180 மிலி அளவு கொண்ட Top Star பிராந்தி பாட்டில்கள் 10 இருந்தன. அதில் ஒரு பாட்டிலை திறந்து நுகர்ந்து பார்த்தபோது ஒருவித விஷ நெடியுடன் கூடிய வாடை வீசியது. அவரிடம் பிராந்தியை விற்பதற்கான உரிமமோ அரசு அனுமதியோ இல்லை. ஆய்வாளர் அதே இடத்தில் அவரை 10.40 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்து 10.50 மணிக்கு 10 பாட்டில்களை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அங்கு தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் நானும் காவலர் மணிவண்ணனும் சாட்சிகளாக இருந்து அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் மணிவண்ணன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.1**. அதில் 2 பாட்டில்களை மாதிரிக்காக எடுத்து SHO ஷீல் வைத்தும் மீதமுள்ள 8 பாட்டில்களை அந்த இடத்திலேயே 11.00 மணிக்கு கொட்டி அழிக்கப்பட்டது. அந்த அழிப்பு மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் மணிவண்ணன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த அழிப்பு மகஜர் **அ.சா.ஆ.2**. மேற்படி மாதிரிக்காக எடுக்கப்பட்ட 2 பாட்டில்கள் **சா.பொ.1 வரிசை**. எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து 11.30 மணிக்கு எதிரி மீது ஆய்வாளர் முதல்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.05 14:30:36 +0530

தகவலறிக்கை பதிவு செய்தார். ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ தினத்தன்று யார் யார் ரோந்து பணிக்கு சென்றோம் என காவல் நிலைய தினக் குறிப்பேட்டில் பதிவுகள் உள்ளன என்றால் சரி. அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று பின்னர் காவல் நிலையம் வந்து முதல் தகவலறிக்கை 11.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரி. கைப்பற்றுதல் மகஜர், அழிப்பு மகஜர் ஆகியன காவல் நிலையத்தில்தான் பிரிண்ட் எடுக்கப்பட்டு அங்குதான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரி. மதுபானம் கொட்டி அழிக்கப்பட்டதாக சொல்லப்படும் காலி பாட்டில்கள் பற்றி தெரியுமா என்றால் அவற்றை சம்பவ இடத்திலேயே போட்டுவிட்டு வந்து விட்டோம். கொட்டி அழிக்கப்பட்டதாக சொல்லப்படும் இடத்தில் வேறு காவல் ஆய்வாளர் எவரேனும் இருந்தாரா என்றால் இல்லை. காவல் நிலைய புள்ளி விவர கணக்கிற்காக ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட வழக்கினை அனுசரித்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. சொல்லக்கூடிய தினம், நேரத்தில் சம்பவ இடத்திற்கு நாங்கள் செல்லவில்லை என்றாலும் எங்கள் காவல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.05 14:30:42 +0530

ஆய்வாளர் எதிரியை கைது செய்யவில்லை எனவும் எதிரியிடமிருந்து தடய பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை எனவும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லையெனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.05 14:30:49 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.137/2025**

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முத்து | Father's Name | : | வைகுண்டம் |
| Village | : | தில்லைவிளாகம் | Taluk | : | முத்துப்பேட்டை |
| Calling | : | | Age | : | 52 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 05th day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தில்லைவிளாகத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். சமத்துவபுரம் சற்குணம் யாரென்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.05 14:30:57 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 07.01.2024 ம் தேதி மதியம் 1.00 மணியளவில் நானும் சற்குணம் என்பவரும் விலாங்காடு சமத்துவபுரம் பஸ் ஸ்டாப் அருகே வந்து கொண்டிருந்தபோது சரத்குமார் என்பவர் பிராந்தி பாட்டில் வைத்திருந்ததாக சொல்லி அவரை கைது செய்ததாகவும் அவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணைக்காக சம்பவ இடத்தை பார்வையிடுகிறோம் எனவும் எங்களிடம் ஆய்வாளர் தெரிவித்து எங்களை சாட்சியாக இருக்க சொல்லி ஆய்வாளர் பார்வை மகஜர் தயார் செய்ததில் நான் 2 வது சாட்சியாகவும் சற்குணம் முதல் சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம் என்றால் தவறு. எதிரி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரியை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.05 14:31:04 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.